செய்தி வெளியீடு எண் : 1144 நாள் : 26.05.2025

## செய்தி வெளியீடு

## 2025–26 ஆம் கல்வியாண்டு முதல் செயல்படும் வகையில் 11 புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (26.5.2025) தலைமைச் செயலகத்தில், உயர்கல்வித் துறை சார்பில் 2025–26 ஆம் கல்வியாண்டு முதல் செயல்படும் வகையில், கடலூர் மாவட்டம் – பண்ருட்டி, நீலகிரி மாவட்டம் – குன்னூர், திண்டுக்கல் மாவட்டம் – நத்தம், சென்னை மாவட்டம் – ஆலந்தூர், விழுப்புரம் மாவட்டம்– விக்கிரவாண்டி, செங்கல்பட்டு மாவட்டம் – செய்யூர், சிவகங்கை மாவட்டம் – மானாமதுரை, திருவாரூர் மாவட்டம்– முத்துப்பேட்டை, தஞ்சாவூர் மாவட்டம் – திருவிடைமருதூர், பெரம்பலூர் மாவட்டம் – கொளக்காநத்தம் மற்றும் தூத்துக்குடி மாவட்டம் – ஒட்டப்பிடாரம் ஆகிய இடங்களில் 11 புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை காணொலிக் காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார்.

தமிழ்நாட்டில் உயர்கல்வியை மேம்படுத்தும் நோக்கில், அதிக எண்ணிக்கையிலான உயர்கல்வி நிறுவனங்களை தொடங்குதல், அதன் வாயிலாக ஆராய்ச்சி, புதுமைப்படைப்புகள், தொழில்நுட்ப வளர்ச்சி ஆகியவற்றில் மாணவர்களின் திறன்களை வளர்த்து, வேலைவாய்ப்பினை உறுதி செய்தல், "நான் முதல்வன்" திட்டத்தின் மூலம் தகுதிவாய்ந்த திறன்மிகு இளைஞர்களை உருவாக்குதல், அரசுப் பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை படித்த மாணவிகள் உயர்கல்வி பயில "புதுமைப் பெண்" திட்டம் மற்றும் மாணவர்கள் உயர்கல்வி பயில "தமிழ்ப்புதல்வன்" திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் மாதம் ரூ.1000/– உதவித் தொகை வழங்குதல், முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கு சலுகைகள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருவதால் அகில இந்திய அளவில் உயர்கல்வி சேர்க்கையில் தமிழ்நாடு முதலிடம் வகித்து வருகிறது.

ஏழை எளிய கிராமப்புற மாணவ, மாணவியர்களின் உயர்கல்வித் தேவையை நிறைவுசெய்யும் பொருட்டு, 2025–26ஆம் ஆண்டிற்கான உயர்கல்வித் துறை மானியக் கோரிக்கையில், நீலகிரி மாவட்டம் – குன்னூர், திண்டுக்கல் மாவட்டம்– நத்தம், சென்னை மாவட்டம் – ஆலந்தூர், விழுப்புரம் மாவட்டம்– விக்கிரவாண்டி, செங்கல்பட்டு மாவட்டம் – செய்யூர்,

சிவகங்கை மாவட்டம்– மானாமதுரை, திருவாரூர் மாவட்டம் – முத்துப்பேட்டை, தஞ்சாவூர் மாவட்டம் – திருவிடைமருதூர், பெரம்பலூர் மாவட்டம்– கொளக்காநத்தம் மற்றும் தூத்துக்குடி மாவட்டம் – ஒட்டப்பிடாரம் ஆகிய இடங்களில் 10 புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. மேலும், கடலூரில் 21.2.2025 அன்று நடைபெற்ற அரசு விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கடலூர் மாவட்டம் – பண்ருட்டியில் புதிய அரசு கலை மற்றும் அறிவியில் கல்லூரி தொடங்கப்படும் என்று அறிவித்தார்.

அந்த அறிவிப்பின்படி, 2025–26 ஆம் கல்வியாண்டு முதல் செயல்படும் வகையில், 11 புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

இப்புதிய கல்லூரிகள் ஒவ்வொன்றும் தலா 5 பாடப்பிரிவுகளுடன் தொடங்கப்படும். மேலும், ஒவ்வொரு கல்லூரிக்கும் 12 ஆசிரியர்கள் (உதவிப் பேராசிரியர்கள் பணியிடங்கள் முதலாமாண்டிற்கு மட்டும்) மற்றும் 14 ஆசிரியரல்லாப் பணியிடங்கள் வீதம் 11 கல்லூரிகளுக்கு மொத்தம் 132 ஆசிரியர்கள் மற்றும் 154 ஆசிரியரல்லாப் பணியிடங்களைத் தோற்றுவித்து, 11 கல்லூரிகளுக்கு ஓராண்டுக்கான தொடர் மற்றும் தொடராச் செலவினத்திற்காக மொத்தம் 25 கோடியே 27 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**ஒவ்வொரு கல்லூரிக்கும் 5 பாடப்பிரிவுகளில் ஓராண்டுக்கு 3050 மாணவர்கள் வீதம் 3 ஆண்டுகளுக்கு 9150 மாணவர்கள் பயன்பெறுவர்.**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் இன்றையதினம் தொடங்கி வைக்கப்பட்ட இப்புதிய 11 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை சேர்த்து, தமிழ்நாட்டில் தற்போது செயல்பட்டு வரும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் எண்ணிக்கை 176 ஆக உயர்ந்துள்ளது.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின், மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், மாண்புமிகு தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் திரு.நா.முருகானந்தம், இ.ஆ.ப., உயர்கல்வித் துறை செயலாளர் திரு.சி.சமயமூர்த்தி, இ.ஆ.ப., கல்லூரி கல்வி ஆணையர் திருமதி

எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., பொதுப்பணித் துறை தலைமை பொறியாளர் (தொழில்நுட்ப பிரிவு) திரு. வெ. சுகுமாரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

காணொலிக் காட்சி வாயிலாக சிவகங்கை மாவட்டம் – மானாமதுரையிலிருந்து மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. கே.ஆர். பெரியகருப்பன், சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஆ. தமிழரசி, மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ஆஷா அஜித், இ.ஆ.ப., சென்னை மாவட்டம் – ஆலந்தூரிலிருந்து மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன், நாடாளுமன்ற உறுப்பினர் திரு.டி.ஆர். பாலு, மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, இ.ஆ.ப., நீலகிரி மாவட்டம் – குன்னூரிலிருந்து மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன், அரசு தலைமை கொறடா திரு.கா.ராமச்சந்திரன், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு இ.ஆ.ப., திண்டுக்கல் மாவட்டம் – நத்ததிலிருந்து மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. அர. சக்கரபாணி, நாடாளுமன்ற உறுப்பினர் திரு .ஆர். சச்சிதானந்தம், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எஸ். சரவணன், இ.ஆ.ப., பெரம்பலூர் மாவட்டம் – கொளக்காநத்ததிலிருந்து மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் திரு.சா.சி.சிவசங்கர், சட்டமன்ற உறுப்பினர் திரு.ம.பிரபாகரன், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கிரேஸ் பச்சாவ் இ.ஆ.ப.,

செங்கல்பட்டு மாவட்டம் – செய்யூரிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் திரு.க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.க.சுந்தர், திரு. மு. பாபு, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ச.அருண்ராஜ், இ.ஆ.ப., விழுப்புரம் மாவட்டம் – விக்கிரவாண்டியிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் திரு. து.ரவிக்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் முனைவர் க.பொன்முடி, திரு.அன்னியூர் அ.சிவா, மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான்,இ.ஆ.ப., கடலூர் மாவட்டம் – பண்ருட்டியிலிருந்து சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.தி.வேல்முருகன், திரு.சபா.இராஜேந்திரன், ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் திருமதி இரா. சரண்யா இ.ஆ.ப.,

தஞ்சாவூர் மாவட்டம் – திருவிடைமருதூரிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் திரு. எஸ் கல்யாணசுந்தரம், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. க. அன்பழகன், திரு. டி.கே.ஜி. நீலமேகம், கும்பகோணம் மாநகராட்சி மேயர் திரு க. சரவணன், துணை மேயர் திரு. சுப. தமிழழகன், மாவட்ட

ஆட்சித் தலைவர் திருமதி பா பிரியங்கா பங்கஜம் இ.ஆ.ப., திருவாரூர் மாவட்டம் – முத்துப்பேட்டையிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் திரு.வை. செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. க மாரிமுத்து, திரு. பூண்டி கே. கலைவாணன், மாவட்ட ஆட்சி தலைவர் திரு. வ. மோகனசந்திரன் இ.ஆ.ப., தூத்துக்குடி மாவட்டம் – ஒட்டப்பிடாரத்திலிருந்து சட்டமன்ற உறுப்பினர் திரு. சண்முகையா, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. க. இளம் பகவத், இ.ஆ.ப., உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

.......

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu